<u>சுகாதார அமைச்சின்</u>

<u>தாதியர் பயிற்சி கற்கை நெறிக்கு ஆட்சேர்ப்பதற்கு</u>
<u>**இணையத்தள வழியாக சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்**</u>

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இணையத்தளம் வழியாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.

விண்ணப்பங்களை சுகாதார அமைச்சின் www.health@gov.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.

<u>2018 ஆம் வருடத்தில் அல்லது 2019 ஆம் வருடத்தின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் வருடத்தின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய ஏதாவதொரு கல்வி பொது தராதர (உ.தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி சித்தியடைந்தவர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுவார்கள்.</u> (உரிய விபரங்கள் அறிவித்தலின் இலக்கம் 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 01 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.)

விண்ணப்பமுடிவுத் திகதி **2022.01.31** ஆகும்.

ஒரு விண்ணப்பதாரியினால் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

**கவனிக்கப்பட வேண்டியவை:**

ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2018 மற்றும் 2019 ஆகிய இரண்டு வருடங்களிலும் க.பொ.த (உ.தர) பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் ஒரு விண்ணப்பதாரரினால் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்க்கப்பிக்கமுடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்ட வருடத்திற்காக விண்ணப்பிக்க முடியும். இரண்டு வருடங்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. அவ்வாறின்றி இரண்டு வருடங்களிலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

கடந்த ஆட்சேர்ப்புகளின் போது உண்மைக்குப் புறம்பான தகவல்கள் (பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டுகள், பாடங்களில் பெற்ற சித்தி, பெற்ற Zமதிப்பெண் போன்ற தரவுகளை மாற்றுதல்) உள்ளிட்டு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் சிலர் கண்டறியப்பட்டனர். இது ஒரு பாரிய தவறாகும். எனவே, எந்தவொரு விண்ணப்பதாரரும் அவரால் சமர்ப்பிக்கப்படும் இணையவழி விண்ணப்பத்தில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை உள்ளிடாதிருத்தல் வேண்டும். உண்மைக்குப் புறம்பான தகவல்களுடன் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் என்பதுடன், அவர்களின் பெயர்கள் மீண்டும் அரசாங்க சேவைக்கு இணைய முடியாதவர்களின் பட்டியலுக்கு உள்வாங்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக படித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கை நெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியுள்ளவர் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். நீங்கள் அவ்வாறு தகுதியானவராக இருந்தால் மட்டும் வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 7.2வது பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 500/= பணத்தை வங்கியில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் பின்வரும் ஆவணங்கள் மற்றும் பற்றுச்சீட்டு உள்ளிட்ட தகவல்களுடன் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய ஆரம்பிக்கவும்.

**விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல் முறைகளை ஆரம்பிக்க முன்னர் விண்ணப்பதாரியிடம் இருக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் விபரங்கள்**

- தேசிய அடையாள அட்டை
- உங்களின் உயரம் (செ.மீட்டரில்) குறிப்பிடப்படல் வேண்டும்
- க.பொ.த (சா.தரம்)/ (உ.தரம்) சான்றிதழ்கள் மற்றும் Z மதிப்பெண்களைக் காட்டும் ஆவணம்
- தொடர்பு கொள்ள வேண்டிய கையடக்க தொலைபேசி இலக்கம்
- வர்த்தமானி அறிவித்தலின் 7.2 பிரிவின் படிரூபா 500/= பணத்தை செலுத்தியபின்னர் வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு

கையடக்க தொலைபேசி இலக்கமொன்றை உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது அல்லது தாய் அல்லது தகப்பன் அல்லது நெருங்கிய ஒருவரின் தொலைபேசி இலக்கத்தையும் உள்ளிடலாம்.

இலங்கை வங்கியின் எந்த வொருகிளையிலும் அல்லது பணவைப்பு இயந்திரம் ஊடாக அல்லது இணையத்தள வங்கி சேவைகளின் ஊடாக 500/= ரூபா பணத்தை இலங்கை வங்கியின் தெப்ரபிறேன் கிளையின் இலக்கம் **7041318** எனும் சுகாதாரசேவை பணிப்பாளர் நாயகத்தின் கணக்கிற்கு செலுத்தி பெற்றுகொண்ட பற்றுச்சீட்டில் உள்ள அச்சு இலக்கங்களை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் உள்ளிடவும். பணம் செலுத்திய பின்னர் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பதாரி தன்வசம் பாதுகாப்பாக வைத்திருக்கவும். (ATM இயந்திரத்தின் ஊடாக அல்லது இணையத்தள வங்கி சேவைகளின் ஊடாக பணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்த பற்றுச்சீட்டில் அடங்கிய தரவுகள் பின்னர் அழியக்கூடும் என்பதால் மூலப்பிரதிக்கு மேலதிகமாக நிழற் பிரதி யொன்றையும் வைத்திருக்கவும்.)

**இணைய வழி ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டியவை:**

1. விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்தல் வேண்டும்.
2. க.பொ.த (உ.தர) பரீட்சையில் பயன் படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்த வேண்டும்.
3. உரிய பரீட்சை இலக்கத்தை உள்ளிட்டதும் க.பொ.த (உயர் தர) பரீட்சை பெறுபேறுகள் மற்றும் க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேறுகள் தானாகவே உருவாகும். எனினும் அந்த பெறுபேறுகளில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின், உங்களிடம் உள்ள பெறுபேற்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளை அதற்கு கீழே உள்ள பிரிவில் குறிப்பிடவும்.

**விஷேட கவனத்திற்கு :**

வர்த்தமானி அறிவித்தல் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து தெளிவு பெற்ற பின்னர், இதற்காக தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் இணையவழி ஊடாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது தொழில்நுட்பரீதியில் ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் மட்டும் அந்த தொழில்நுட்ப சிக்கல்கள் தொடர்பாக சுகாதார அமைச்சின் மனிதவள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் **0112 340 007** எனும் தொலை பேசி இலக்கத்துடன் வாரநாட்களில் (அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த) தொடர்பு கொண்டு அது தொடர்பான அறிவுறுத்தல்களைப் பெறமுடியும். **பிறவிடயங்கள் தொடர்பாக விசாரிப்பதைத்தவிர்க்கவும்.**

- பூர்த்தி செய்த விண்ணப்பத்தை இணைய வழி ஊடாக சமர்ப்பித்த பின்னர் அதன் அச்சுப் பிரதி யொன்றை பெற்று தம்வசம் வைத்திருக்கவும். **அதனை தபாலில் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.**